# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

கர்த்தர் நல்லவர் மாத்திரமல்ல, வல்லமையுள்ள மகத்துவமான காரியங்களை நம் குடுபங்களில் நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் மேலாக செய்யும் பொழுது ஒரு பெரிய விடுதலையுணர்வை நாம் பெற்றுக் கொள்கிறோம். அப்படிப்பட்ட விடுதலை யுணர்வை பெற்றுக்கொண்ட அனுபவத்தோடு உங்கள் அனைவருக்கும் அப்படிப்பட்ட மேலான அனுபவத்தை உங்கள் குடும்ப வாழ்வில் அனுபவிக்க கர்த்தர் உங்களனை வரையும் ஆசீர்வதிப்பாராக. இந்த மாதத்தில் நடைபெறப் போகிற நிர்வாக குழு தேர்ந்தெடுப்பதில் கர்த்தர் நமக்கு உதவி செய்ய நாம் அனைவரும் ஜெபத்தோடு கலந்து கொள்வோம். கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களை செய்வாராக.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran

*"Dear Father, we pray you would clothe our children in Your holy armor. We thank you that You are fighting the battle for us. Help our children to stand firm in Your ways. Give them the grace to persevere in a culture bent on stealing their sexual purity and love for You. Amen"*



# *Meditation* (தியானம்)

அன்பிற்குரியவர்களே!,

*உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத்திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?.*
(*சங்கீதம்* 85:6)

*இங்கே சங்கீதக்காரனுடைய வாஞ்சையான ஜெபத்தை கவனமாக தியானித்துப்பாருங்கள், அது உங்கள் வாழ்க்கையை உயிர்ப்பிக்கும். தேவ ஜனங்கள் கர்த்தரில் மகிழ்ந்திருக்க வேண்டியவர்கள், ஆனால் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் உயிர்ப்பிக்கப் படாமல் இருப்பது, கர்த்தரில் மகிழ்ந்திருக்க முடியாத படி செய்து விடுகிறது. ஆதலால் சங்கீதக்காரனுடைய உருக்கமான வேண்டுகோள் கர்த்தாவே எங்கள் மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும். என்றைக்கும் எங்கள் மேல் கோபமாயிராதேயும் என்று தாழ்மையோடு வேண்டிக் கொள்கிறான். இந்த சங்கீதத்தின் தலைப்பில் கோராகின் புத்திரர்கள் பாடினதாக இருக்கிறது. இதனுடைய பின்னணியத்தை எண்ணாகமம்* 16 *ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக கோராகின் புத்திரர்கள் எழும்பி, சபைமக்களையும் தூண்டி விட்டு கலகத்தில் துணிகரமாக ஈடுபடுகிறார்கள். கர்த்தரின் கோபம் பற்றி எரிகிறது, பூமி பிளந்து இவர்களை விழுங்கிப் போட்டது. பிதாக்கள் செய்த பாவம் பிள்ளைகளை தொடராத படி கர்த்தர் கிருபையாய்*

செயல்படுவதை கோராகின் புத்திரர்கள் எண்ணிப் பார்த்து, 1 முதல் 3 வசனங்களில் தேவனுடைய உண்மைத்துவத்தை புகழ்ந்து பாடுகிறார்கள். தமது ஜனத்தின் மீது தேவன் பிரியம் வைத்திருப்பதை உணர்ந்து பாடுகிறார்கள். தங்களது சிறையிருப்பை திருப்பி, ஜனத்தின் பாவத்தை, அக்கிரமத்தை மன்னித்தது மாத்திரமல்ல, அவை அனைத்தையும் மூடி விட்டார். தேவன் மூடிய பாவங்களை இந்த உலகத்தில் யாராலும் வெளிப்படுத்த முடியாது. இந்த சத்தியத்தை தாவீது சங்கீதம் 32ல் பாவம் மூடப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்று சொல்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் மூடும். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுடைய பாவங்களை இயேசுவின் இரத்தம் கழுவி சுத்திகரித்து, முற்றிலுமாக நீக்கியிருக்கிறது. பிதாவாகிய தேவனோடு நெருங்கிய உறவை ஏற்படுத்தி நம்மை ஆவிக்குரிய வாழ்வில் உயிர்பித்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இந்த ஆவிக்குரிய உயிர்ப்பை நம்மில் நிகழ்த்தி இருக்கிறார். திரும்ப உயிர்ப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு விசு வாசிகள் வசனம் 6 ன் படி கர்த்தரில் மகிழ்ந்திருக்கி றோமா?. கோராகின் புத்திரர்கள் இங்கே பாடலை ஜெபமாகச் செய்கிறார்கள் வசனம் 6 ல். திரும்ப எங்களை உயிர்ப்பியும் உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும் படி என்று. கடந்த காலங்களில் கர்த்தர் உண்மையுள்ளராக, இரக்கமுள்ளவராக பாவங்களை, அக்கிரமத்தை மன்னித்தது போல இப்போதுள்ள துன்ப, துயரங்களை இரக்கமாய் கண்ணோக்கிப்

பார்த்து விடுதலை கொடுக்கும்படி 4 முதல் 7 வசனங்களில் பாடல் ஜெபமாக வெளிப் படுத்தப் படுகிறது. மறுபடியும் எங்களை இரட்சியும், எங்கள் மேலுள்ள உமது கோபத்தை, எரிச்சலை ஆறப் பண்ணும், கிருபையினால் எங்களை இரட்சியும் என்று புதிய ஏற்பாட்டு சத்தியத்தை ஏக்கமாக வெளிப்படுத்து கிறார்கள். ஆனால் நமக்கோ கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இலவசமாக இரட்சிக்கப் பட்டிருக்கிறோம். நாம் எந்த அளவுக்கு இந்த சத்தியத்தை உள்வாங்கி கர்த்தரில் மகிழ்ந்திருக்கி றோம்? கர்த்தரில் மகிழ்ந்திருப்பது தான் விசுவாசிகளுக்கு சக்தியை, பெலத்தைக் கொடுக்கிறது என்ற மாபெரும் உண்மையை நாம் கண்டுணர்ந்து விட்டால், ருசித்துப் பார்த்து விட்டால், கர்த்தரில் மகிழ்ந்திருப்பதே நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை யின் முக்கிய குறிக்கோளாக இருக்கும்! இதற்கென்றே நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். எப்படிப் பட்ட மகா மோசமான சூழ்நிலையிலும் ஆபகூக் பாடினவண்ணம் அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சை செடியில், ஒலிவமரத்தில் பலனற்றுப்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். கர்த்தர் என் பெலன். அவர் என்னை உயர்த்துவார். நாமும் இவ்வாறு விசுவாசத்தோடு பாடி, கர்த்தரில் எப்பொழுதும் மகிழ்ந்திருந்து, புதிய பெலத்தைப் பெற்றுக் கொள் வோமா. 8 முதல் 13 வசனங்களில் கர்த்தர் சொல்லு

வதை கேட்பேன் என்ற தீர்மானத்தோடு, தீர்க்க தரிசனமாக கர்த்தருக்கு பயந்தவர்களுக்கு ரட்சிப்பு மிக சமீபமாக இருக்கிறது என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை, பலவிதமான வார்த்தை களான கிருபையும் சத்தியமும் ஒன்றை யொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றை யொன்று முத்தஞ்செய்யும், சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும், தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும், நீதி அவருக்கு முன்னாகச் சென்று அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தி, நன்மையானதைத் தருவார். இப்படிப் பட்ட ஆசீர்வாதங்களை இந்த கிருபையின் காலத்திலே இருக்கிற நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமா?

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**
Rev. Christopher Rajendran.

## *செயலரிடமிருந்து.......*

**கி**றிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மே மாதம் முழுவதும் தேவ கிருபை நம்மோடிருந்து இம்மட்டுமாய் காத்து வழி நடத்தி வந்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஆராதனையும் நமக்கு ஆசீர்வாதமாக அமைய தேவன் கிருபை செய்தார். குறிப்பாக நமது போதகர் அவர்களின் விடுமுறை நாட்களில்

நமது திருச்சபையின் ஊழியத்ததையும் பொறுப்பேற்று செயல் படுத்தித் தந்த அபுதாபி ஆயர் Rev. James Paul Raj மற்றும் ஆயரம்மா Rev.Padma James ஆகியோருக்கு நம் உள்ளத்தின் ஆழங்களிலிருந்து நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம்.

மேலும் வரும் நாட்களில் நாம் நடத்த திட்டமிட்டிருக்கும் வருடாந்திர பொதுக்குழுக் கூடுகைக்காக, அந்நாளிலே புதிதாய் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் செயற்குழுவிற்காக ஜெபிப்போம்.

நமது போதகர் அவர்களின் விடுமறை நாட்களை ஆசீர்வாதமாக்கிக் கொடுத்து, ஏற்ற வேளையில் மீண்டுமாக இந்த இடத்திலே அழைத்து வந்து தம் ஊழியங்களை தொடர கிருபை புரிந்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

மேலும், தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் அப்பேர்பட்ட வாய்பினை அருள்வாராக.

***M. நேசமணி.***

**********************

## <u>பெண்கள் ஐக்கியச் சங்கம்</u>

*அன்புக்குரிய தாய்மார்களே !*

*கர்த்தர் நமக்கு பெரிய பெரிய காரியங்களை செய்ய எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார். ஆனால் நாம் தான் அதை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ள ஆவிக்குரிய ஆயத்தமில்லாமல் இருக்கிறோம். இந்த மாதம் நடைபெறவுள்ள பெண்கள் ஐக்கிய சங்கத்தில் உற்சாகத்துடன் கலந்து கொள்ளுங்கள்.ஆவிக்குரிய ஆயத்தமில்லாமல் இருக்கிற நம்மை நாமே சோதித்து பார்க்கவும்,ஆவிக்குரிய ஆயத்தமடையவும்,பிற*

சகோதிரிகளை உற்சாகப்படுத்தவும் முன் வாருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
உங்கள் ஆயரம்மா,
**Angel.C.**

## Projects for this month.

For congregation:-

உங்கள் குடும்பத்தினுடைய முக்கிய ஜெபக்குறிப்பை எழுதி ஆயரிடம் கொடுத்தால்,அந்த ஜெபக்குறிப்பை ஆலயத்தில் ஆராதனை நேரத்தில் ஆல்டர் ஜெபத்தில் ஏறெடுக்கப்படும்.

For Junior church:

*Write your own prayer and submit to the pastor before 25th of June.*

For Men's Fellowship:

உங்கள் வீட்டில் ஒரு நாள் குடும்ப ஜெபத்தை நடத்தவும். உங்கள் குடும்ப ஜெபத்தை பற்றிய அனுபவங்களை ஆண்கள் ஐக்கியத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

For Women's Fellowship:

ஆண்கள் ஐக்கியத்தின் PROJECT .

For Youth fellowship:

வாலிபத்தை எப்படி கையாள வேண்டும் என்று வேதம் கூறுகிறது? வாலிப ஐக்கியத்தில் விவாதிக்கப்படும்.

*******************

# பரிசுத்தாவியின் ஒத்தாசை

**"பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடையஆவியியனாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"**
**( சகரியா 4:6)**

நமக்கு கோபம் வருகிறதைப்போல இருக்கும் போது அல்லது கோபப்படுத்து கிறவர்கள் நம்மிடம் வருவதற்க்கு முன்பாக நாம் தீர்மானித்து நமது கிறிஸ்துவின் ஆவியின் ஆலோசனையை நாடுவோம். ஆண்டவரே நான் என்ன பேசவேண்டும்? எக்படி பேசவேண்டும். நீர்தான் எனக்காக பேசவேண்டும் என்று கேட்போம். நீர்தான் எனக்காக பேசவேண்டும் என்று ஆவியானவரிடம் கேட்போம். அப்பொழுது ஆவியானவர் உதவி செய்வார். மத் 10:20 -ல் பார்கிறபடி பேசுகிறவர்கள் நீங்களல்ல உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுவார். என்று எழுதியிருக்கிறது.

கோபங்கள் வரும்போது நம்முடைய சிந்தனைகளை பரலோகத்திற்க்கு நேராக செலுத்துவோம், நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை தேடுங்கள் பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள். (கோலோ. 3:1,2).

தற்போதைய உலக சூழலில் நடந்து கொண்டிருக்கும் பாடுகள் இனி நம்மில் கிறிஸ்து வெளிப்பட போகும் மகிமைக்கு ஒப்பானவையல்ல. ஆவியானவருடைய ஒத்தா சையை நாடும் போது அவர் நமக்கு இனிமையான தெய்வீக சுபாவத்தையும், ஆவியின் கனிகளையும் அள்ளி தருவார். அவர் தருகிற ஆவியின் கனியாகிய சாந்தம் கோபத்தை

மேற்க்கொள்ளும். இயேசு சொன்னார் "நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

ஆகவே தேவபிள்ளைகளாகிய நாம் கேபத்தை தவர்த்து ஆவியானவரின் கிரியைகளை நாடும் போது நிச்சயமாகவே நமக்கு வெற்றியை தருவார்.

- **நெல்சன் சோபித ராஜ்.**

# BEST FRIENDS DAY

## *'A good friend shouldn't just be someone to hang out with but someone who encourages and challenges us to be more like Jesus'*

## *3 Reasons why Jesus can be your best friend.*

## *Jesus knows you*

*Jesus can be your special Best Friend because He knows you better than anyone else. He knows all about you. He even knows your thoughts! He even knows how many hairs you have on your head. He has them all numbered! He said, "...the very hairs of your head are all numbered" (Matthew 10:30).*

## *Jesus loves you*

*He loved you so much that He gave His life for you. And He loves you today just as much as He did then.*

*Jesus said, "Greater love has no man than this, that a man lay down his life for his friends" (John 15:13).*

## *Jesus wants the best for you*

*He will guide you in making decisions if you ask for His help and trust Him. He knows your needs and is eager to fulfill them.*

*-Joshua. K*

## CHILDREN'S PLACE

### CHILDRENS' QUIZ FOR THE MONTH

THE GOSPEL ACCORDING TO John (Chapters 6 to 10)

1. According to Philip how much will it cost to feed 5000 men by that time with each one to have a bite?

a) 5000 US$

b)Two hundred pennyworth

c) Eight months wages

d) Eighty months wages

2. When did five small barley loaves and two small fish became enough for 5000 men to eat?
a) When Jesus gave thanks
b) When Jesus prayed to God to feed them.
c) When Jesus started to request Jesus
d) None of the above

3. According to Simon Peter, who have the words of eternal life?
a) Devil
b) Judas
c) Jesus
d) Philip

4. Jesus Said
a) I am the bread of life
b) I am the good shepherd
c) I am the light of the world
d) All of the above

5. What is the native language of devil?
a) English
b) Arabic
c) Lie
d) Truth

6. I have come into this world so that the blind will____________ and those who see will become__________
a) Be blind and deaf
b) Be deaf and dump
c) See and deaf
d) See and blind

7. Who will never see death?
a) Who is always praying
b) Who is always reading bible
c) Who keeps God's words
d) None of the above

8. Who is good shepherd?
a) Who abandons the sheep and runs away
b) Who kills the wolves
c) Who lays down his life for the sheep (10:11)
d) Who is wake up full night for protecting the sheep

9. One of the Jesus' Disciples is 'devil'. Who is he?
a) John
b) Judas (6:70)
c) Mathew
d) Philip

10. Why did Jesus weep?
a) Jesus wept because Mary wept
b) On hearing death of Lazarus whom He loved(11:36)
c) Due to Judas' betrayal
d) Jews wanted to kill Him

# Correct answers:


1. a) By receiving true light (1:12)
2. c) Person who "Makes straight the way of the Lord"(1:23)
3. c) (a) & (b)1:34 & 1:49
4. d) Jesus obeyed His mother's request.(2:3&4)
5. a) 46 Years(2:20)
6. b) By believing Jesus, only begotten Son of God(3:16)
7. d) Doing God's will & to finish His work(4:34
8. a) Curing son of a Noble Man(4:54)
9. c) (a) & (b)(5:18)
10. b) Jesus Christ- The son of Man(5:27)


## *Children who answered correctly:*

1. *Roshan Ravindra*
2. *Easterine Benedicta Raj*
3. *Joshika Vashni*
4. *Joshuva K.*
5. *Earline Bernice Raj*
6. *Jonathan Asher*
7. *Jeremiah Alan*
8. *Angelin Sophia Nelson*
9. *Jesvin Selvakumar*
10. *Geovin George Rose*
11. *Gain George Rose*
12. *Eric Jayden Jason*
13. *Annlin Sophia Nelson*
14. *Diniya Sunshine*
15. *Mervin Samuel Lawrance*
16. *Shelbino Paul*
17. *Johan Sanjo*
18. *Earline Bernice Raj*
19. *Dennis Roger*

***Congrats !! you have done a wonderful job !!***

# Children show your talent



# "Beating Plastic pollution"

Let's make a change in what God has given us…

The world is for you,

God had made it new.

With beauties everywhere,

All for us to share.




But what have we done?

Plastic has shown up,

It has destroyed after enjoying.

While we were ignoring,

What we promised take care of!

But God still cares ….

Whether we share or make bare

So are we sharing or polluting

Let's join hands in this session

**In beating plastic pollution…**

**-Joshika Vashni**

# வேத வினா விடைப் போட்டி – ஜீன் 2018

(உன்னதப்பாட்டு 1 முதல் ஏசாயா 10 வரை)

1. திர்சாவைப் போல் சௌந்தரியம் உள்ளது யார்?
2. ஆண்டவர் கூலிக்கு வாங்கின சவரகன் கத்தி யாது?
3. தேவனுடைய கோபத்தின் கோல்?
4. நீதிபுரம் என அழைக்கப்படும் நகரம் யாது?
5. தேவன் ஆகாசிற்கு கொடுத்த அடையாளம் என்ன?
6. கால்களில் சிலம்பொலிக்க திரிவது யார்?
7. ஏசாயாவின் இளைய மகனின் பெயர் என்ன?
8. யாருடைய கைகள் இரத்த கறையால் நிறைந்திருக்கிறது?
9. உன்னதப்பாட்டின் ஆக்கியோன் யார்?
10. ஏசாயா தீர்க்கன் தரிசனம் கண்ட ஆண்டு?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

## கடந்த மாதத்திற்கான விடைகள்

1. வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய (28:9)
2. குரூரதூதன் அவனுக்கு விரோதமாக அனுப்பப்படுவான். (17:11)
3. நியாயத்தீர்ப்பு (21:15)

4. நேச அனலைக் காண்பிக்கிற உதடுகளோடு கூடிய தீய நெஞ்சம் (26:23)

5. இனிய சொற்கள் (16:24)

6. தூக்கத்தை விரும்பும் போது(20:13)

7. தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந் திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்.(31:23)

8. தீவினை செய்ய உபாயஞ்செய்கிறவன்(24:8)

9. கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும். (30:17)

10. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு(19:23)

**கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

1. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்.
2. திருமதி. ஜெயின் ராஜவேல்.
3. திருமதி. அனிதா சுரேஷ்.
4. திருமதி. ராதிகா செல்வகுமார்.
5. திருமதி. அனிதா ஜார்ஜ்.
6. திரு. ஜார்ஜ் ரோஸ்.
7. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி.
8. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்.
9. திருமதி. பெட்ரீஷியா ஜேசன்.

10. திருமதி. பிப்லின் நெல்சன்.

11. திரு. ஜேசன் சாமுவேல்.

12. திருமதி. எபென் A. பிரசாத்.

13. திருமதி. ஜெயந்தா ஜாண்.

14. திருமதி. ஷகிலா கிரேஷ் ஜஸ்டின்.

15. திருமதி. ஜமுனா ராஜன்.

***OLD TESTAMENT STATISTICS:***

**-----------------**

**Number of books: 39**
**Chapters: 929**
**Verses: 23,114**
**Words: 602,585**
**Letters: 2,278,100**
**Middle book: Proverbs**
**Middle chapter: Job 20**
**Middle verses: 2 Chronicles 20:17,18**
**Smallest book: Obadiah**
**Shortest verse: 1 Chronicles 1:25**
**Longest verse: Esther 8:9 (78 words)**
**Longest chapter: Psalms 119**

***NEW TESTAMENT STATISTICS:***

**----------------**

**Number of books: 27**
**Chapters: 260**
**Verses: 7,957**
**Words: 180,552**
**Letters: 838,380**
**Middle book: 2 Thessalonians**

**Middle chapters: Romans 8, 9**
**Middle verse: Acts 27:17**
**Smallest book: 3 John**
**Shortest verse: John 11:35**
**Longest verse: Revelation 20:4 (68 words)**
**Longest chapter: Luke 1**

**************

**There are 8,674 different Hebrew words in the Bible, 5,624 different Greek words, and 12,143 different English words in the King James Version.**

***************

**• Written by Approximately 40 Authors**
**• Written over a period of 1,600 years**
**• Written over 40 generations**
**• Written in three languages: Hebrew, Greek and Aramaic**
**• Written on three continents: Europe, Asia and Africa**
**• Written in different locations: wilderness, dungeon, palace, prison, in exile, at home**
**• Written by men from all occupations: kings, peasants, doctors, fishermen, tax collectors, scholars, etc.**
**• Written in different times: war, peace, poverty, prosperity, freedom and slavery**
**• Written in different moods: heights of joy to the depths of despair**
**• Written in harmonious agreement on a widely diverse range of subjects and doctrines**

***************

**10 Longest Books in the Bible**

- **Psalm - 150 chapters, 2,461 verses, 43,743 words**
- **Jeremiah - 52 chapters, 1,364 verses, 42,659 words**
- **Ezekiel - 48 chapters, 1,273 verses, 39,407 words**
- **Genesis - 50 chapters, 1,533 verses, 38,267 words**
- **Isaiah - 66 chapters, 1,292 verses, 37,044 words**
- **Numbers - 36 chapters, 1,288 verses, 32,902 words**
- **Exodus - 40 chapters, 1,213 verses, 32.602 words**
- **Deuteronomy - 34 chapters, 959 verses, 28,461 words**
- **2 Chronicles - 36 chapters, 822 verses, 26,074 words**
- **Luke - 24 chapters, 1,151 verses, 25,944 words**

***************

**10 Shortest Books in the Bible**

- **3 John - 1 chapter, 14 verses, 299 words**
- **2 John - 1 chapter, 13 verses, 303 words**
- **Philemon - 1 chapter, 25 verses, 445 words**
- **Jude - 1 chapter, 25 verses, 613 words**
- **Obadiah - 1 chapter, 21 verses, 670 words**
- **Titus - 3 chapters, 46 verses, 921 words**
- **2 Thessalonians - 3 chapters, 47 verses, 1,042 words**
- **Haggai - 2 chapters, 38 verses, 1,131 words**
- **Nahum - 3 chapters, 47 verses, 1,285 words**
- **Jonah - 4 chapters, 48 verses, 1,321 words.**

*Mrs. Ceciliya Rajkumar.*

## “நீதியின் சூரியன்” பக்குவப்படுத்தும் அருமையான கனி - உபாகமம் 34:14

**க**னி இல்லாத ஒரு மரத்ததை யாருமே விரும்பு வதில்லை. தாங்கள் வைக்கிற மரம் எப்படியாவது கனி

கொடுத்து விட வேண்டும் என்று மரத்தை வைக்கிற மனுஷன் விரும்புவதுண்டு. அவன் எதிர் பார்க்கிற நாளில் கனி கொடுக்கவில்லை யென்றால் அந்த மனுஷன் எவ்வளவு கஷ்டப்படுவான். காரணம், ஒரு மரத்ததை நடும் போது அந்த மரம் ஒரு பக்குவமான அதாவது மிகவும் சுவை நிறைந்த கனியைத் தர வேண்டும் என்பதற்காக அவன் செலவிட்ட நேரத்திற்கும் காலத்திற்கும் அளவேயில்லை. ஆகவே தான் இத்தனை பாரம் அவன் மனதில் எழுகிறது.

இதைப் போலவே தான், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் நடுகிற மரம் மிகுந்த பக்குவமான சுவையான கனிகளை கொடுக்க வேண்டும் என்பதற்காக் பட்டபாடுகள் அளவற்றவை.

வேதம் சொல்லுகிறது, "கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி அடிக்கடி அதற்கு தண்ணீர் பாய்ச்சி ஒருவரும் அதை சேதப்படுத்தாத படிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன் (ஏசாயா 27 : 2 & 3) என்று.

ஆம், தேவன் தன்னுடைய மரம் நல்ல கனிகளைத் தர வேண்டும் அதாவது புஷிப்பதற்கு ஏற்றவிதமான சுவை நிறைந்த நல்ல கனிகளைத் தர வேண்டும் என்கிற விஷயத்தில் எவ்வளவு கவனமாய் இருக்கிறார். இன்னும் அவர் தம்முடைய மரங்களுக்காகப் பட்ட பாடுகளை தெரிந்து கொள்ளும் வண்ணமாக தீர்க்கதரிசனமாக அனேக காரியங்களை வேதத்தின் வாயிலாக கற்பிக்கிறார். எடுத்துக்காட்டாக ஏசாயா 53 ஆம் அதிகாரத்தை படித்துப்பார்ப் போமானால் ஒவ்வொரு கனிகளையும் உருவாக்க கர்த்தர் எப்படிப் பட்டதான பாடுகளை கடந்து வந்தார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஆகவே, அருமையானவர்களே நம்முடைய தனிப்பட்பட வரிழ்வில், குடும்பத்தில், சபைகளில் உள்ள மரங்கள் நல்ல பக்குவமுள்ள கனிகளை கொடுக்க வேண்டுமானால் உலகத்தோடு ஒட்டியிருக்கிற கிளைகளை வெட்டி நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவின் வெளிச்சம் படுகிற

இடத்தில் வைப்போம். அப்பொழுது அந்த மரம் மிகுந்த கனிகளை கொடுக்கும் என்பதில் சந்தேமேயில்லை.

***ஏனென்றால் வேதம் சொல்லுகிறது,***

“நானே திராட்சைச் செடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது” – யோவான் 15:5.

***M.நேசமணி***

## WEDDING ANNIVERSARY –June 2018

| | | | |
|---|---|---|---|
| *1* | *2-Jun* | *Mr.Ashok Daniel Prabakaran<br>Mrs.Princy Ashok* | *052 593 1927* |
| *2* | *6-Jun* | *Mr.Ashok Prasad<br>Mrs.Eben A.Prasad* | *050 783 4649* |
| *3* | *15-Jun* | *Mr.S.Deva Prakash<br>Mrs. Sheeba Deva Prakash* | *055 317 1742* |
| *4* | *29-Jun* | *Mr.Celin Jose<br>Mrs.Anitha Jose* | *055 790 5909* |



# BIRTHDAY CELEBERANTS - June 2018

| | | | |
|---|---|---|---|
| 1 | 4-Jun | Mrs.Esther Gerald Antony | 055 701 1315 |
| 2 | 5-Jun | Mrs.Anna Jothi Yobu | 055 832 8701 |
| 3 | 8-Jun | Mr.Ujin Raj | 056 272 5446 |
| 4 | 9-Jun | Miss.Ansilin Suga Yobu | 055 832 8701 |
| 5 | 10-Jun | Mr.Saman Raj Kumar | 050 322 7592 |
| 6 | 16-Jun | Mr.Ashok Daniel Prabakaran | 052 593 1927 |
| 7 | 17-Jun | Mrs.Anitha Jose | 055 790 5909 |
| 8 | 22-Jun | Mr.Melbin Paul | 056 394 1817 |
| 9 | 23-Jun | Mr.Belfer John Sigamony | 055 730 9275 |
| 10 | 23-Jun | Mr.David Johnson Premkumar | 050 850 7652 |
| 11 | 24-Jun | Mr.Ashok Prasad | 050 783 4649 |
| 12 | 27-Jun | Mrs.Shiny Rebeca David | 055 640 0635 |
| 13 | 30-Jun | Mr.M.Nesamony | 050 523 7237 |
| 14 | 30-Jun | Mrs.Sinduja Sathish Kumar | 055 814 6143 |



# DAILY BIBLE READING June – 2018

"Your word is a lamp to my feet and light for my path path" Ps.119:105

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Fri | Psalm 88 | Deuteronomy 5 |
| 2 | Sat | Psalm 89 | Deuteronomy 6 |
| 3 | Sun | Psalm 90 | Deuteronomy 7 |
| 4 | Mon | Psalm 91 | Deuteronomy 8 |
| 5 | Tue | Psalm 92 - 93 | Deuteronomy 9 |
| 6 | Wed | Psalm 94 | Deuteronomy 10 |
| 7 | Thu | Psalm 95 -96 | Deuteronomy 11 |
| 8 | Fri | Psalm 97 - 98 | Deuteronomy 12 |
| 9 | Sat | Psalm 99 - 101 | Deuteronomy 13 -14 |
| 10 | Sun | Psalm 102 | Deuteronomy 15 |
| 11 | Mon | Psalm 103 | Deuteronomy 16 |
| 12 | Tue | Psalm 104 | Deuteronomy 17 |
| 13 | Wed | Psalm 105 | Deuteronomy 18 |
| 14 | Thu | Psalm 106 | Deuteronomy 19 |
| 15 | Fri | Psalm 107 | Deuteronomy 20 |
| 16 | Sat | Psalm 108 - 109 | Deuteronomy 21 |
| 17 | Sun | Psalm 110 - 111 | Deuteronomy 22 |
| 18 | Mon | Psalm 112 - 113 | Deuteronomy 23 |
| 19 | Tue | Psalm 114 - 115 | Deuteronomy 24 |
| 20 | Wed | Psalm 116 | Deuteronomy 25 |
| 21 | Thu | Psalm 117 - 118 | Deuteronomy 26 |
| 22 | Fri | Psalm 119: 1 - 24 | Duet 27 : 1 - 28:19 |
| 23 | Sat | Psalm 119: 25 - 48 | Duet 28 :20 - 68 |
| 24 | Sun | Psalm 119: 49 - 72 | Deuteronomy 29 |
| 25 | Mon | Psalm 119: 73 - 96 | Deuteronomy 30 |
| 26 | Tue | Psalm 119: 97 - 120 | Deuteronomy 31 |
| 27 | Wed | Psalm 119: 121 -144 | Deuteronomy 32 |
| 28 | Thu | Psalm 119: 145 - 176 | Deuteronomy 33 - 34 |
| 29 | Fri | Psalm 120 - 122 | Joshua 1 |
| 30 | Sat | Psalm 123 -125 | Joshua 2 |

# Worship Timings

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Saturdays | 07.00 PM | Gospel Ministry |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of Every Month | 11.30 PM | Month End & Beginning Prayer |